**அ.வ.எண். 88/2023**
**வா.சா.1 : ரகுநாதன்**
**தேதி : 08.01.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

உங்கள் பாட்டனார் பெயர் பழனியப்ப கோனார். என் தகப்பனாருக்கு பூர்வீக சொத்து 10 ஏக்கர் 57 செண்ட் விவசாய நிலங்கள் இருந்தது. மேற்சொன்ன சொத்துக்கள் வெஞ்சமாங்கூடலூர் 8.31 ஏக்கர் மேல்பாகத்திலும், 2.26 ஏக்கர் கீழ்பாகத்திலும் இருந்தது. மேற்படி சொத்துக்கள் மானாவாரி கிணற்றுப்பாசனம். என் உடன் பிறந்தவர்கள் 2 ஆண், 2 பெண் ஆவார்கள். 8 ஆம் பிரதிவாதி கமலத்திற்கு 1969 ல் திருமணம் நடைபெற்றது. 9 ஆம் பிரதிவாதக்கு 1973 திருமணம் நடைபெற்றது. இதுவரையும் மேற்சொன்ன 8, 9 பிரதிவாதிகளுக்கு சீர்வரிசை இதுவரை முறையாக செய்து வருகிறோம். 1973 முதல் 1985 வரை மொத்தம் வாங்கிய சொத்துக்கள் 32 ஏக்கர் 75 செண்ட் வாங்கியுள்ளோம். மேற்சொன்ன 2 பிரதிவாதிகளும் அவர்கள் திருமணத்திற்கு அவர்கள் கணவருடன் இருந்து வருகிறார்கள் அவர்கள் விவசாயத்தில் பங்கு கொள்ளவில்லை. ஆண்வாரிசுகளாகிய நாங்கள் எங்கள் பெற்றோர்களை இறுதி காலம் வரை நாங்கள் தான் பராமரித்து இறுதி காரியம் செய்தோம். நீங்கள் 8, 9 பிரதிவாதிகளுக்கு இன்று வரை சீர்வரிசை செய்து வருவதால் அவர்களக்கு பாகம் கொடுக்கவேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் ஆண்வாரிசுகளக்கு மட்டுமே பாத்தியப்பட்டது அவர்களுக்கு மட்டுமே பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**8 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் 8, 9 பிரதிவாதிகளுக்கு சீர்வரிசை சரியாக செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 8, 9 பிரதிவாதிகள் உங்கள் பெற்றோர்கள் இறந்தபோது அவர்கள் செய்ய வேண்டிய சீர்களை முறையாக செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்களும் மற்றும் உங்கள் சகோதரர்களும் மற்ற சகோதரிகளும் உங்கள் பெற்றோர்களை இறுதிகாலம் வரை பார்த்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல நானும் என் சகோதரர்கள் மட்டும் தான் என் பெற்றோர்களை இறுதி வரை பார்த்துக்கொண்டோம்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.09 17:56:33 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.